# 300 சடலம் புலிகள் கையளிப்பர்


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 29 இதழ் 270
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 14 11 1993


(கொழும்பு)

பூநகரி மோதலில் புலிகளின் தாக்குதலில் கடந்த வியாழக்கிழமை உயிரிழந்த 300 படையினரின் சடலங்களை அரசிடம் கையளிக்கப் புலிகள் முன்வந்துள்ளதாக நேற்றிரவு ஏஜென்ஸிச் செய்திஒன்று தெரிவித்தது. சடலங்களை ஒப்படைப்பதற்கான

(4-ம் பக்கம் பார்க்க)

## 200 படையினர் தரையிறக்கமாம்!

(மணிலா)

பூநகரி இராணுவ கப்பற்படை முகாமை தமது முற்றுகையில் வைத்திருக்கும் விடுதலைப் புலிகளிடமிருந்து இந்த முகாமை மீட்க இலங்கை இராணுவம் கடுமையான மு

(4-ம் பக்கம் பார்க்க)

## பூநகரியில் கடும் போர் டாங்கி அழிப்பு

(யாழ்ப்பாணம்)

பூநகரி நாகதேவன்துறை இராணுவ, கடற்படை கூட்டுத்தளம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய 'ஒபரேசன் தவளை' தாக்குதல் நடவடிக்கை மூலம் யாழ்குடா நாட்

(4-ம் பக்கம் பார்க்க)

## ● குருநகர் புனித யாகப்பர்

# தேவாலயம் மீது குண்டுவீச்சு

# பத்துப்பேர் உடல்சிதறிப் பலி!

## - 25 பேர் காயம்; கோயில் முற்றாக சேதம் -

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர் பிரதான வீதியில் குருநகர் புனித யாகப்பர் தேவாலயத்தின் மீது நேற்றுக்காலை மேற்கொள்ளப்பட்ட 'சுப்பசொனிக்' எரிகுண்டு வீச்சினால் தேவாலயத்தினுள் தஞ்சம் புகுந்திருந்த பொதுமக்களில் 10 பேர் உடல்சிதறிப் பலியானார்கள், 25க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்ததுடன் தேவாலயமும் முற்றாகச் சேதமடைந்து இடிந்துவிட்டது.

நேற்றுக்காலை 7-15 மணியளவில் யாழ். நகர் மீது வட்டமிட்ட இரு சுப்பசொனிக்குண்டுவீச்சுவிமானங்களில் ஒன்றுதிடீரெனப்பதிந்து இரு குண்டுகளை ஒரே நேரத்தில் மேற்படி தேவாலயத்தின் மீது வீசியது. சுப்பசொனிக்கை கண்டு தேவாலயத்தினுள் தஞ்சம் புகுந்திருந்தவர்களும், வழிபாடு நடத்தியவர்களுமாக 10 பேர் உடல்சிதறிப் பலியானார்கள். 25 பேர் படுகாயம்

(4ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயத்தினுள் பலத்த குண்டுத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர் மீது இரண்டாவது தடவையாக தாக்குதல் நடாத்திய சுப்பசொனிக் விமானம் பாதுகாப்பு வலயத்தை இலக்காக வைத்தே தாக்கியுள்ளன. இப்பகுதியில் எட்டு இடங்களில் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இப்பகுதியில் தாக்குதல் இடம்பெறும் போது பொதுமக்கள் பெரும் அவலக்குரலை எழுப்பியுள்ளனர்.

நேற்று நண்பகல் 2-15

(2ம் பக்கம் பார்க்க)

## கொக்குவிலிலும் குண்டுவீச்சு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் நந்தாவில் பகுதியில் அம்மன்கோவிலுக்கு அருகாமையில் நேற்று பிப 2-15 மணியளவில் சுப்பசொனி விமானம் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் பத்து பேர் காயமடைந்துள்ளனர். ஆறு வீடுகள் சேதமடைந்துள்ளன.

யாழ். போதனா வைத்தியசாலைப் பாதுகாப்பு வலயத்தில் ஒரு சுப்பசொனிக் குண்டு வீசிய நேரத்தில் மற்றொரு

(2-ம் பக்கம் பார்க்க)

## கொட்டடியில் சிறுவன் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ். கொட்டடி யோனுந்தோட்டப் பகுதியில் நேற்று நண்பகல் 2-15 மணியளவில் சுப்பசொனிக் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் ஒரு சிறுவன் கொல்லப்பட்டார். ஐவர் காயமடைந்தனர்.

அருணராசா சதீஸ் (வயது 5) என்ற சிறுவனே மரணமானவராவார்.

சின்னக்கண்ணை வீதியில் சந்திரசேகரம் பராகினி (வயது 5), யோனுந்தோட்டப் பகுதி

(2-ம் பக்கம் பார்க்க)

## பலாலியில் புலிகள் தாக்கு அதிகாரி; 4 படையினர் பலி!

(மணிலா)

விடுதலைப் புலிகள் பலாலி இராணுவ முகாம்மீது நேற்றுமுன்தினம் தொடுத்த கடும் தாக்குதலில் ஒரு உயர் அதிகாரி உட்பட 5 இராணுவத்தினர் கொல்லப்பட்டார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பூநகரி முகாம் தாக்குதலின்போது பல ஆயு

(4-ம் பக்கம் பார்க்க)

## யாகப்பர் ஆலய தாக்குதலில் உயிரிழந்த, காயமடைந்த பொதுமக்கள் விபரம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் புனித யாகப்பர் ஆலயம் மீதான சுப்பசொனிக் தாக்குதலில் கொல்லப்பட்ட பத்துப்பேரில் ஒன்பதுபேரின்

(4-ம் பக்கம் பார்க்க)

## படை நடவடிக்கைக்காக தொடர்ந்தும் ஊரடங்கு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் இராணுவத்தினர் படை நடவடிக்கைகளை தொடர்வதற்கு உதவியாக தொடர்ந்தும் வடபகுதி முழுவதும் ஊரடங்குச்சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடபகுதியில் தொடரும் படை நடவடிக்கைக்கேற்ப

(4ம் பக்கத் தொடர்ச்சி)

## பாதுகாப்பு வலயத்துள் இரவு ஷெல் வீச்சு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்து நேற்று இரவு பத்துமணிக்கு பாதுகாப்பு வலயப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

(2-ம் பக்கம் பார்க்க)

## 900 படையினரை அரசு இழந்தது!

(கொழும்பு)

பூநகரி இராணுவ முகாம் மீதான புலிகளின் தாக்குதலில் அரசு 900க்கும் மேற்பட்ட படையினரை இழந்திருக்கலாம் என இராணுவ வட்டாரங்களே ஒப்புக்கொண்டிருப்பதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

படையினரில் 600 பேர் என்ன ஆனார்கள் என்றே

(6-ம் பக்கம் பார்க்க)

## பிரபா கொழும்பு வந்தால் ஆச்சரியப்பட முடியாது

(கொழும்பு)

இராணுவத்தின் இயலாமையை தொடர்ந்து புலிகளின் தலைவர் திரு பிரபாகரனே அல்லது அவரது படையோ கொழும்பு நோக்கி அணிவகுத்து வந்தாலும் ஆச்சரியப்பட முடியாதென நாடாளுமன்ற அணைசபா நாயகர் திரு காமினி

(2ம் பக்கத் தொடர்ச்சி)

## விளம்பரம்

### நவம்பர் 10 முதல் சனிமாற்ற பலாபலன்கள்

31-5-95 வரை கும்பராசியில் சனி சஞ்சரிக்கும். விரைவில், சனிமாற்றம் ரூபா 10/- பாடசாலை, அலுவலக உபகரணங்கள் விற்பனையாகின்றன. சோபிதா புத்தகசாலை, யாழ்ப்பாணம். (இ-590)

### வியாபாரிகளுக்கு

தரமான இமிடேசன் கோல்ட் வெறிம் நகைகள் மணப்பெண்களின் சோடனை நகைகள், லேஸ், நூல் வகைகள் சிறுவர் விளையாட்டுப் பொருட்கள் மற்றும் வெளிநாட்டு, உள்நாட்டு அழகு சாதனப் பொருட்களை நிதான விலையில் மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். ஜெயா அழகு சாதன மாளிகை 177A, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (எ-358)

### அப்பியாசக்கொப்பி

மாணவர்களின் சீருடைகள் பிரகாசமான வெண்மையுடன் விளங்கிட மிக்கவைற் நீலசோப். மிக்கவைற் சலவைத்தூள் உதவுகின்றன 25 மிக்கவைற் நீலசோப் மேலுறைகள் / சலவைத்தூள் வெற்றுப் பக்கற்றுகள் தருபவர்க்கு ஒரு அப்பியாச கொப்பி அன்பளிப்பு. 'மிக்கவைற்'' (ஏ-3581)

### பரீட்சை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மணிவாசகர் சபை இன்று நடாத்துவதாக இருந்த சைவசமயப் பாடப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. பரீட்சைக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும். -இ

**பலாலியில்**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தங்கள் மட்டுமல்ல பல இராணுவ வீரர்களையும் புலிகள் சிறைபிடித்து சென்றுள்ளனர் என்று வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. -ம இ

**கொட்டடியில்**

1-ம் பக்கத் தொடர்ச்சி

யில் ஜெயலிங்கம் லக்சாந்தன் (வயது 1), அவர் பேத்தியான சுந்தையா நாகபூரணம் (51 வயது) ஆகியோரும் முஸ்லிம் தெருவில் மாணிக்கம் மகேஸ்வரி (60 வயது), கலைவாணி (வயது 16) ஆகியோரும் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை மண்டைதீவிலிருந்து ஏவப்பட்ட ஷெல் கோணந்தோட்டத்தில் வீழ்ந்ததில் மாடு ஒன்றும் இறந்தது. நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற இத்தாக்குதலினால் ஸ்ரீஸ்கந்தராசா (வயது 37) என்பவரது வீடு சேதமடைந்ததுடன் அவரும் அவரது மனைவி ஜெயராணி 31 வயது என்பவரும் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். 157-க-சி

**பிரபா கொழும்பிற்கு**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொன்சேகா அச்சம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கையில் இனப்பிரச்சினை என்று ஒன்றில்லை இருப்பதெல்லாம் பயங்கரவாதப் பிரச்சினையே எனக் கூறி இராணுவத்தீர்வை நம்பும் ஜனாதிபதி விஜயதுங்க தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளலாமென முன்னாள் விமானப்படைத்தளபதி ஹரி குணதிலக கூறியுள்ளார். (இ)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து ஒப்பந்த அடிப்படையிலான தரவுப் பதிவு இயக்குநர் பதவிக்கான விண்ணப்பங்கள் 1993 டிசெம்பர் 10 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

சம்பளம்:- 4105/-ரூபா மாதமொன்றுக்கு (நிலையானது)

தகைமைகள்:- க.பொ.த (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் ஆறு பாடங்களில் சித்தியடைந்து அவற்றில் ஐந்து திறமைச் சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும்.

குறிப்பு:- தரவுப்பதிவு இயக்குநராகப் பணியாற்றி அனுபவம் பெற்றோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

வயது:- நாற்பது ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் 20/- ரூபாவை நிதிக்கிளையில் செலுத்திய பின்னர் இப் பல்கலைக்கழகஸ்தாபனக் கிளையில் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெறக்கூடிய படிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும். தபால் மூலம் படிவங்களையும் இதர விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதியான காசுக்கட்டளை / தபாற்கட்டளையுடன் 23 X 10 ச.மீ அளவுடைய சுயமுகவரியிட்டு 1/- முத்திரையொட்டப்பட்ட கடித உறையும் அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவத்தில் அனுப்பப்படும் விண்ணப்பம் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும். அரசாங்கத்திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனத்தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதியின் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் தெளிவில்லாமல் விபரங்கள் கொடுக்கப்படுகின்ற விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993-11-09

(ஏ-3587)

**பாதுகாப்புவலயத்துள்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மணியளவில் யாழ். நகர் மீது 2வது தடவையாக இரு சுப்பசொனிக்குகள் வட்டமிட்டு பாதுகாப்பு வலயத்தின் மீது குண்டுத்தாக்குதலையும் ரொக்கட் மற்றும் கலிபர் தாக்குதலையும் மேற்கொண்டதினால் யாழ். நகரமே பீதியில் மூழ்கியது.

சுப்பசொனிக் ஒன்று நடாத்திய குண்டுத் தாக்குதலினால் ஆஸ்பத்திரிக்கு முன்பாக மணிக்கூட்டு கோபுர வீதியில் உள்ள ஊர்காவற்றுறை ப.நோ.கூ.ச. களஞ்சியசாலை முற்றாகச் சேதமடைந்ததுடன் அதனைச் சுற்றியுள்ள பல வீடுகளும் பலத்த சேதமடைந்தன. நீர்க் கால்வாயினுள் குண்டு விழுந்ததால் பாரிய சேதம் ஏற்படவில்லை. இக் குண்டு தாக்குதலின் அதிர்ச்சியில் யாழ். போதனா வைத்தியசாலையின் முன்னால் ஓ.பி.டி. கட்டிடக் கண்ணாடிகளும் கூரை ஓடுகளும், ஜன்னல் கண்ணாடிகளும் நொருங்கி சேதமடைந்தன.

மற்றைய சுப்பசொனிக் நடாத்திய ரொக்கட் மற்றும் கலிபர் தாக்குதல்கள் முழுவதும் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள நவீன சந்தையின் 2வது கட்டடத்தின் முன் பகுதியிலுள்ள உள் கூரைகளிலும் அதன் அருகிலுள்ள சில கடைகளிலும் சேதத்தை ஏற்படுத்தியது.

இக்கட்டிடத்தின் அருகிலுள்ள மலாயன் கபேக்கு முன்னுலுள்ள வீதியிலும் ரொக்கட் குண்டு ஒன்று விழுந்து வெடித்ததினால் வீதியில் சிறிய குழிகள் ஏற்பட்டுள்ளன.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்னாலுள்ள சாந்தித் தியேட்டர் பகுதியிலும் அதன் அருகாமையிலுள்ள முனியப்பர் வீதியிலுள்ள சில வீடுகளும் 90 கலிபர் தாக்குதல்களினால் சேதமடைந்துள்ளன.

தீபாவளி தினமான நேற்று பாதுகாப்பு வலயத்தினுள் கூடி நின்ற பெருந்திரளான பொதுமக்கள், வீதி வியாபாரிகள் இந்த விமானத் தாக்குதல்களினால் நாலாபுறமும் சிதறி ஓடினார்கள். இப்பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்கள் அனைத்தும் பாதுகாப்பான இடங்களை நோக்கி விரைந்தன. வீதி ஒழுங்குகளை கவனித்துக் கொண்டிருந்த தொண்டர்கள் வீதியிலேயே விழுந்து படுத்துக் கொண்டார்கள்.

இச்சம்பவத்தை தொடர்ந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் ஆஸ்பத்திரிக்கு வந்து நிலைமைகளை பார்வையிட்டதுடன் குண்டு வீச்சு மற்றும் ரொக்கட், கலிபர் தாக்குதல்கள் நடைபெற்ற இடங்களையும் பார்வையிட்டனர்.

பாதுகாப்பு வலயத்தினுள் பல பகுதியிலும் இடம்பெற்ற சுப்பசொனிக் தாக்குதலினால் யாழ் நகர மக்கள் பெரும் அச்சமும் பீதியும் அடைந்தும் காணப்பட்டனர்.

**ஜெனிவாவிற்கு தகவல்**

யாழ். போதனா வைத்தியசாலைக்கு அருகில் பாதுகாப்பு வலயத்திற்குள் விமானத்தாக்குதல் நடத்தியது குறித்து சர்வதேச செஞ்சிலுவைச்சங்க கொழும்பு அலுவலகத்தின் ஊடாக ஜெனீவாவிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கதலைமைச்செயலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச்சங்க யாழ் வதிவிடப்பிரதிநிதி திரு பிலட்சுமிஸர் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக கருத்து எதனையும் தற்போது கூறமுடியாது என்றும் அவர் மேலும் கூறினர். இ—வி

**பாதுகாப்பு**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குதலினால் பாதுகாப்பு வலயப்பகுதிக்குள் சில வீடுகள் பலத்த சேதமடைந்தன. மேலதிக சேதம் பற்றி தகவல் எதுவும் கிடைக்கவில்லை. -இ

**கொக்குவிலிலும்**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சுப்பசொனிக் நந்தாவில் பகுதியில் குண்டொன்றை வீசியது.

இச்சம்பவத்தின் போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறுமுகம் பாலசுந்தரேஸ்வரி (வயது 37), அவர் பிள்ளைகளான இனியா வயது 10, தனஞ்சயன் (வயது 8), தனுஷன் வயது 4) ஐஸ்வரியா (வயது 2) மற்றும் பசுபதி சேனாதிராசா (வயது 70 இவர் இடதுகாலும், இடது கையும் துண்டிக்கப்பட்டார். இவரின் மனைவி சேனாதிராசா செல்லக்கண்டு (வயது 60 இவர்களின் மகன் செல்வநாயகம் (வயது 41) ஆகியோரே காயமடைந்தனர்களாவர். காயமடைந்தவர்கள் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இப்பகுதியில் தொடர்ச்சியாக தாக்குதல் நடாத்தப்பட்டுவருவதும் குறிப்பிடத்தக்கது. -157-சி-இ

**300 சடலங்கள்**

1ம் பக்கத் தொடர்ச்சி

தமதுவிருப்பத்தை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் அரசுக்கு தெரிவித்துள்ளதாகவும் அச்செய்தி தெரிவித்தது. இத்தாக்குதலில் இதுவரை600 படையினர் கொல்லப்பட்டிருப்பதாகவும் பலர் காணாமல் போய்விட்டதால் அவர்கள் பற்றி எதுவும் தெரியவில்லை எனவும் இராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டி மற்றொரு செய்தி கூறியது. -இ

**படை நடவடிக்கை**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பல படைத் தளபதிகளும் வடக்கே படைமுகாம்களில் தங்கி நின்று வழி நடத்துவதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. -இ-ி

**900 படையினர்**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரியவில்லை என்றும் அவர்கள் காணாமல் போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் பலர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று இராணுவம் கருதுகிறதாம்.

இதேவேளை 300க்கு மேற்பட்ட படையினர் உயிரிழந்து விட்டதாகவும் இராணுவம் கூறியிருப்பதாகவும் பி.பி.ஸி. தெரிவித்தது. -இ


சங்கானை — வெல்லில்

அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமண்ய சுவாமி தேவஸ்தான
ஸ்கந்தஷஷ்டி இலட்ச நாமார்ச்சனை
இலட்ச ஹோம
பெருவிழா விஞ்ஞாபனம்

ஸ்கந்த ஷஷ்டி தினத்தை முன்னிட்டு
இன்று (14-11-93) ஞாயிற்றுக்கிழமை

காலை 7 மணி தொடக்கம் நவோத்திர சத (109) சங்காபிஷேகமும், அதனைத் தொடர்ந்து நியாச பூர்வ சண்முக அர்ச்சனையும் ஹோமமும் தர்ப்பணமும் தொடர்ந்து 6 நாட்கள் நடைபெறவுள்ளது.

19-11-93 வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு சூரசம்கார விழாவும் இடம்பெறும்.

தேவஸ்தான முகாமையாளர்.

(ஏ-390)



ஓம்
ஸ்ரீ ராகவேந்திராய நமக

திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ஸ்ரீ முக வருடம் 30-ம் நாள் (15-11-93) திங்கட்கிழமை
காலை 9-00 மணி முதல் 10-30 மணி வரையுள்ள
தனுலக்கினமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| எமது சிரேஷ்ட புத்திரன் | எமது ஏகபுத்திரி |
| திருநிறைச் செல்வன் | திரு நிறைசெல்வி |
| நிரஞ்சன் | ரேணுகாதேவி |
| அவர்கட்கும் | அவர்கட்கும் |

திருச்சி கலக்டர் ஆபிஸ் ரோட், சங்கம் ஹோட்டல் மண்டபத்தில்
நடைபெறும் திருமண வைபவத்திற்கு
தாங்கள் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து, விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி வ. இ. வயித்திலிங்கம்,
பங்காளர்: ஆர். வி. ஜி. பீடி ஸ்தாபனம்,
58, ஓறுக்குத்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.
173-3/1, ஆட்டுப்பட்டித்தெரு,
கொழும்பு-13.

திரு. திருமதி க. அருமைச்செல்வம்.
சீ. 14, 5-வது மெயின் ரோட்,
இரசமலிங்கநகர், திருச்சி.

( இரு வீட்டார் அழைப்பு ) (இ-596)

**மணிவாக்கு**

நடந்து முடிந்ததும் உதவ முடியாததும் பற்றி கவலைப்பட்டு வருந்தில் பயனில்லை.

—வில்லியம் ஷேக்ஸ்பியர்

# நமது நோக்கு

## இதுதான் பயங்கரவாதம்!

பூநகரியின் இழப்பால் ஏற்பட்ட அதிர்ச்சி, ஆத்திரம், விரக்தி அப்பாவிப் பொதுமக்கள் மீது கொடூரம் இழைக்கும் பயங்கரவாதமாக மாறியிருக்கிறது.

எச்சேரியாழியில் வீசப்பட்ட குண்டினால் அரசாங்க அதிபர் உட்பட அரச ஊழியர்கள் காயம் பட்டிருக்கிறார்கள்.

இத்தகைய அரச பயங்கரவாதம் சகல தரப்பினராலும் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

அன்னியர் இங்கு மாறி மாறி வந்து, போர்முனையில் எமது இறைமையைப் பறித்தெடுத்தனர். 1948ல் நாடு சுதந்திரம் பெற்றது. ஆனால், இறைமை சிங்கள இனத்திற்குக் கைமாறிவிட்டது என்பதை உடன் உணரமுடியவில்லை.

இதனால், விழிப்புற்ற தமிழர்கள் இறைமையை மீண்டும் நிலைநாட்ட முற்பட்டபோது, இனக்கலவரங்கள் என்ற பெயரில், அரச பயங்கரவாதம் மறைமுகமாக கட்டவிழ்த்துவிடப்பட்டது.

இன்று, பகிரங்கமாகவே அரச பயங்கரவாதம் பொதுமக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டு வருகின்றது.

யுத்தமுனைக்குப் பல மைல்கள் தூரத்திலுள்ள பொதுமக்கள் மாத்திரமல்ல அரச ஊழியரே பாதிக்கப்படுகின்றனர்.

பொதுமக்களுடைய நாளாந்த வாழ்க்கை முறைகளை ஓரளவிற்காவது ஒழுங்குபடுத்தி நிர்வாக அலுவல்களைக் கவனிக்கும் உயர் அரச அதிகாரிகளுக்கே பாதுகாப்பு இல்லாத நிலை தோன்றியுள்ளது.

அமெரிக்கா சென்றிருந்த பிரதமர், ஆசியாவிலேயே ஜனநாயகத்தைப் பேணும் நாடு சிறீலங்கா எனப் பெருமையோடு கூறியிருந்தார். ஜனநாயக விரோதக் கிளர்ச்சிகளை நீக்க அனுதாபமும் ஆதரவும் வேண்டும் எனக் கோரியிருந்தார்.

இங்கு நிலவும் மனித உரிமை மீறல்கள் பற்றிச் சர்வதேச நிறுவனங்கள் வெளியிட்ட அறிக்கைகள் பற்றி அமெரிக்காவுக்கு எதுவும் தெரியாது எனப் பிரதமர் நினைத்துவிட்டாரா?

அழகாக ஜனநாயகம் பற்றிப் பேசிவிட்டால் போதுமா? செயலில் ஜனநாயகத்தை, மனித உரிமை மீறல்களை எவ்வாறு அரசு பேணிக்காக்கின்றது என்பதைப் பிறர் கவனிக்கவில்லை என்று நினைப்பா?

தமிழ் மக்கள் தனியான ஆட்சி அமைய வேண்டுமென்ற எண்ணத்தை மேலும் வலுப்படுத்தும் என்பதை அரசு உணர வேண்டும்!

# பூநகரி முகாம் பகுதி ஒரே புகைமண்டலமாகமாறிவிட்டது

(கொழும்பு)

பூநகரி பகுதி ஒரே புகை மண்டலமாக காட்சியளிப்பதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைகள் தலைமையலுவலகம் நேற்று தெரிவித்தது.

விடுதலைப்புலிகளுக்கும் பூநகரி முகாம் தாக்குதலிலிருந்து உயிர்தப்பியுள்ள எஞ்சியுள்ள படையினருக்கும் இடையில் தொடர்ந்தும் அங்கு கடும் சண்டை இடம் பெற்று வருகிறது.

இருதரப்பினருக்கும் இடையில் கடுமையான மோதல் இடம் பெறுவதாலேயே பூநகரி முகாம் அமைந்துள்ள பகுதி ஒரே புகை மண்டலமாகக் காட்சியளிப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளையில் பூநகரிப் பகுதியிலிருந்து படையினர் எவரும் தங்கள் பிடியிலிருந்து தப்பிச் செல்லாத விதத்தில் விடுதலைப்புலிகள் அந்தப்பகுதியைச்சுற்றி மிகுந்த விழிப்புடன் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளையில் புலிகளின் வியூகத்தில் சிக்குண்டு தத்தளித்து உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் படையினரை மீட்க முடியாது அரசு திணறிக் கொண்டிருப்பதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

படையினரை மீட்பதற்கு மேலதிகத் துருப்புக்களை அரசு அனுப்பி வைத்துள்ளபோதும் புதிய படையினர் அங்கு செல்ல முடியாது வெகு தூரத்தில் தரித்து நிற்பதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (இ)

## கூட்டமாக வந்த ஹெலிகளை புலிகள் தாக்கினர்

(யாழ்ப்பாணம்)

பூநகரிப் பகுதியில் நேற்று முன்தினம் நண்பகல் 12-30 மணியளவில் ஆறுக்கும் மேற்பட்ட ஹெலிகொப்டர்கள் வானத்தில் வட்டமிட்டுக் கொண்டிருந்த வேளையில் விடுதலைப் புலிகள் தரையிலிருந்து கடும் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததினால் அவை உடனடியாக பலாலி நோக்கித் திரும்பிச் சென்றதைக் காணக் கூடியதாக இருந்தது.

இந்த ஹெலிகள் பூநகரிப் பகுதியையும் பரவைஷயூர் கடல் பிராந்தியத்தையும் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்த போது பீரங்கி கப்பல் ஒன்று பூநகரிப் பகுதியை நோக்கி பலத்த பீரங்கித் தாக்குதலை நடாத்திய வண்ணம் இருந்தது.

இந்தவேளையில் இப்பீரங்கிக் கப்பலை நோக்கி கடல் புலிகளின் இருவிசைப்படகுகள், மிகவேகமாக சென்று துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தன.

இதையடுத்து பீரங்கி கப்பல் மிகவேகமாக நெடுந்தீவுக் கடல் பகுதிக்குள் சென்றதையும் காணக்கூடியதாக இருந்தது. (வி இ-வி

# ★ நூற்றுக் கணக்கான பயணிகளுடன் ஆயிரம் அடி பள்ளத்தில் 2பஸ்கள்வீழ்ந்துநொருங்கின

(சென்னை)

தமிழகத்தில் கொட்டும் மழையில் மலைப் பிரதேசம் ஒன்றில் இரு பஸ்கள் வந்த போது பெரும் நிலச்சரிவு ஏற்பட்டதால் அவை இரண்டும் ஆயிரம் அடிக்கும் கீழே பள்ளத்தில் வீழ்ந்து நொருங்கி விட்டனவாம்.

இந்த பஸ்களில் வந்த பயணிகளின் கதி,என்னவாயிற்று என்பது தெரியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது

இப்பகுதிக்கு செல்ல முடியாதுள்ளதாலும், தொடர்ந்தும் நிலச்சரிவு ஏற்பட்டு வருவதாலும், கொட்டும் மழை பெய்வதாலும் மீட்புப்பணி ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாம். (வி

## தமிழக நிலச்சரிவு 26 பேர் புதையுண்டனர்

(சென்னை)

தமிழகத்தில் நீலகிரிமா வட்டத்தில் தர்க்கா என்னுமிடத்தில் நேற்று முன்தினம் கொட்டிய பெரும் மழையினால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 18 குடும்பங்களைச் சேர்ந்த 26 பேர் புதையுண்டு இறந்து போயினர்.

இறந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகமாகியிருக்கலாமென்று அஞ்சப்படுகிறது. இதுவரை 25 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன காயமடைந்த ஒருவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்தார்.

இங்கு பெய்த பலத்த மழை வசல் கல் மண்ணுடன் வெள்ளம்கரைபுரண்டோடி தர்க்கா என்னுமிடத்தில் புகுந்து 40 வீடுகளை மூடிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [கி-மி]

## வெளியீட்டு விழா பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெறவிருந்த செம்மையாழியானின் "யாழ்ப்பாணத்து இராத்திகள் சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா பிற்போடப்பட்டுள்ளது என யாழ் இலக்கியவட்டம் அறிவித்துள்ளது.

## பாடசாலை பெயர் மாற்றம்

(மானிப்பாய்)

யாழ். சுன்னாகம் இளையதம்பி இந்து தமிழ் கலவன் வித்தியாலயம் தற்போது யாழ் இளையதம்பி இந்து வித்தியாலயம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. ஆர், சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

## சேவைக்கால ஆங்கில ஆசிரியர் பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

7ம் ஆண்டு முதல் 11ம் ஆண்டுவரை ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்பு கீழ்க்காணும் தேதிகளில் எதிரே உள்ள நிலையங்களில் நடைபெறும்.

நாளை 15ம் திகதி பழைய கோட்டக் கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம் வேலணை யா/யாழ்.இந்துக் கல்லூரி.

16ம் திகதி பழைய கோட்டக் கல்வி அலுவலகம், மருதனார்மடம், பண்டத்தரிப்பு. யா/இராமநாதன் கல்லூரி.

17ம் திகதி பழைய பருத்தித்துறைக் கோட்டம், யாழ். வட இந்துக் கல்லூரி

18ம் திகதி சாவகச்சேரி கோட்டம். யாழ். சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயம்.

## தற்காலிக அதிபர்களுக்கு நிரந்தர நியமனங்கள்

(திருநெல்வேலி)

பாடசாலைகளில் தற்காலிக பதில் அதிபர்களாக கடமையாற்றி வருகின்ற அதிபர்களுக்கு அதிபர் தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

1-6-93க்கு முன்னர் ஒரு வருட கால சேவையாற்றிய பதில் அதிபர்களுக்கே அரசின் பணிப்புரையின்படி அதிபர்தர நியமனங்கள் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளன.

பாடசாலை தரங்களுக்கேற்ப அதிபர் தரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இக்கடிதங்களை கல்வித்திணைக்களம் அதிபர்களுக்கு வழங்கியுள்ளது.

இந்நியமனங்களை ஏற்றுக் கொண்டு கடமையேற்று கடிதங்களை அனுப்பிவைத்தவுடன் அதிபர்தர சம்பளம் வழங்கப்படஉள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (157)

## இலவச நிவாரணம்

(அரியாலை)

ஊரிகாவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் இம்மாதம் முதல் திகதியில் இருந்து இடம்பெயர்ந்தோருக்கான இலவச நிவாரணப் பொருட்கள் உணவு முத்திரை-8 ஒ புள்ளிக்கு வழங்கப்பட்டு வருகின்றது. -59

**மாதம் ஒரு மழை பொழியும் மரங்களை நாட்டினால்.**

## இன்று

(யாழ்ப்பாணம்)

கைதடி மேற்கு இணுக்கித் தோட்ட முத்துக்குமாரசாமி ஆலயத்தில் கந்தசஷ்டி உற்சவம் இன்று தொடக்கம் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

0 0 0

யாழ்ப்பாணம்)

சங்கானை வெல்லிக் கருவி மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி தேவஸ்தான ஸ்கந்தஷஷ்டி இலட்ச நாமர்ச்சனை, இலட்ச ஹோம பெருவிழா இன்று 14-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7-00 மணி தொடக்கம் தொடர்ந்து 6 நாட்கள் இடம் பெறவுள்ளது 19-ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 3-00 மணிக்கு சூரசங்கார விழாவும் நடைபெறும். (ம)

## வைத்திய பரிசோதனை

(ஆனைப்பந்தி)

ஊர்காவற்றுறைக் கோட்டமணிப் பாடசாலைகளைச் சேர்ந்த 144மாணவர்களை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்கள்.

இவர்களில் 55 பேர் பல்வியாதிகளினாலும் 30 பேர் கண்வியாதிகளினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். (101)

## மாணவருக்கு மண்ணெண்ணெய்

(உடுவில்)

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக்கல்லூரியின் இவ்வருடக் கல்வி ஆண்டு தவணைப் பரீட்சைகளை முன்னிட்டு முழுநேரம் வருட பகல்நேர, மாலைநேர பயிற்சி நெறிகளுக்கான மாணவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது. தொழில் நுட்பக்கல்லூரி மாணவர் அவையினால் ஒவ்வொரு மாணவர்களுக்கும் விற்றர் 25 ரூபா விலையில் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது. (10)

## இராசிபலன்

14-11-1993

ஞாயிற்றுக்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி 29)

பிரதமை பி.ழ 2.08 வரை விசாகம் பி. ப. 1. 50 வரை, இராகுகாலம் மாலை 4. 37 முதல் 6. 07 வரை சுபநேரம் காலை 9. 07 முதல் 10.32 வரை கந்தஷஷ்டி விரதம் ஆரம்பம் மரணயோகம்.

மேடம்: பணநஸ்டம், நண்பர்களின் ஆதரவு, வேண்டாத உதவி

இடபம்: தொழில் கீர்த்தி விடாமுயற்சி தயார் பாசம்.

மிதுனம்: உறவினர் பாராட்டு நல்லசெய்தி, மனைவி பெருமை

கடகம்: குடும்ப பிரிவு, மனக்கொதிப்பு, தொழில் குறைவு

சிம்மம்: கைப்பொருள் தவறுதல் மனச்சுமை, அதிக யோசனை

கன்னி: பிறருக்கு உதவுதல் வெளியார் சந்திப்பு, கல்வியால் பெருமை.

துலாம்: செல்வாக்கு பாதிப்பு, தனிமைப்படல், கருத்து மோதல்

விருச்சிகம்: புத்தி தெளிவு, பணவரவு, தந்தையர் உபதேசம்.

தனுசு: அலைந்து திரிதல், வீண்பழி, விரோதியர் சிந்தனை

மகரம்: நோய் தணிவு, தொழில் முதலீடு, வசதியான மாற்றம்

கும்பம்: தெய்வ தரிசனம், சுபகாரிய செலவு, குடும்ப மகிழ்ச்சி

மீனம்: குற்றம் காணல், பெண்பகை, கோபவார்த்தை

— ஜோஸ்யர்.

